484 81

REG. NO. M. 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

RÉPUBLIQUE FRANÇAISE

LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. — புதுவை, பவ ஹூ தை மீ ௨௫ உ (7—2—35) — NO. 11.

## திருமந்திரம்.

குருவென்ப வனேவே தாகமங் கூறும்
பரவின்ப னாகிச் சிவயோகம் பாவித்
தொருசிந்தை யின்றி யுயர்பாச நீக்கி
வருநல் குரவன்பால் வைக்கலு மாமே.

சீர்நந்தி கொண்டு திருமுக மாய்விட்ட
பேர்நந்தி யென்னும் பிறங்கு சடையனை
நானுநந் தெந்து வருமள வுஞ்சொல்லப்
பேர்நந்தி யென்னும் பிதற்றொழி யேனே.

அழிதக வில்லா வரனடி யாரைத்
தொழுதகை ஞாலத்துத் தூங்கிரு ணீங்கும்
பழுது படாவண்ணம் பண்பனை நாடித்
தொழுதெழு வையகத் தோரின்ப மாமே.

உயிர்க்கின்ற வாறு முலகமு மொக்க
வுயிர்க்கின்ற வுள்ளொளி சேர்கின்ற போது
குயிற்கொண்ட பேதை குலாவி யுலாவி
வெயிற்கொண்டென் னுள்ளம் வெளியது வாமே.

விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெயின் மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெயின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெயில் விண்ணவ னாகுமே.

நெறிவழி யேசென்று நேர்மையு ளொன்றித்
தறியிருந் தாற்போலத் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.

உ
திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

[திருவாசகம்]


# வித்தகம்

புதுவை,
பவ ஹ்ஸ் தை மீ 25 உ


## மல பரிபாகம்.

உடலுயிர் அமலமடைந்து நித்தியத்துவம் பெறுதற்கு மல பரிபாகம் இன்றியமையாதது என்பது வேத உண்மை. இருவினை ஒப்புக் கைகூடிய போது தான் மல பரிபாகம் உளதாகும். இருவினை ஒப்பின் இலக்கணம் "வித்தகம்" தொகுதி 1 இல் கூறப்பட்டது. மல பரிபாகம் என்றால் என்னை? அதுதான் உடலுயிரைப் பற்றிய மலம் பரிபாகம் அடைதல்—பக்குவம் அடைதல் என்பது. பக்குவம் அடைதல் எதன் பொருட்டு? அமல மாதற் பொருட்டு. அமல நிலையே நித்தியத்துவம் ஆம். பரிபாகமே விமலம் எனப்படுவது. ஆதலால் மல பரிபாகம் என்னும் விமல நிலை அமல நிலைக்கு ஆரம்ப நிலையாகும்—முதற்படியாகும் என்பது. விமலம் என்பது மலம் ஓர் அளவிற்குச் சுத்தப் படுதலைக் குறிக்கும். உடலுயிரைப் பற்றிய அழுக்கே மலம் எனப்படுவது. செம்பில் களிம்பு போல உடலுயிரில் (சீவனிடத்து) சகசமாய் உள்ளது மலம் என்னும் அழுக்கு. சரீரத்துள்ள ஒன்பது ஓட்டைகளாலும் மயிர்த் துவாரங்களாலும் ஒழுகுவது மலம். இதனால் சரீரத்தோடு அபேதமாயுள்ள மனமும் அழுக் குடையதே யாம் என்பது சொல்லாமலே அமையும்.

### திருவாசகம்.

"........வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்
[டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மோன்பது வாயிற் குடிலை
மலங்கப்புலனைந்தும்வஞ்சனையைச்செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
......................................"

(ஷை சிவபுராணம்.)

இதனால் உடலுயிர் அழுக் குடையன என்பதும் உடலில் உள்ள அழுக்கு நீங்காதபோது உயிரில் உள்ள அழுக்கும் நீங்குதல் முடியாத காரியம் என்பதும் வெள்ளிடையாம். இவ் அழுக்காகிய மலம் குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் விமல மடைவதே மல பரிபாகம் என்பது. பாசுபதம் என்பதும் இதுவே. பாசு என்னும் மாசு மாசு என்னும் மலம் பதமாதலே—பக்குவம் பெறுதலே—பரிபாக முறுதலே பாசுபதம் என்பதும் "பாசுபதம்" என்னும் கட்டுரையை நோக்குக. ("வித்தகம்" தொகுதி 1 இல 37.) சவ மணம் என்னும் இவ் அழுக்காகிய மலம் விமல மடைதலே சிவ மணம் என்பது; சிவ சம்பந்தம் என்பது; சைவம் என்பது. அசுத்த சரீரமாகிய மல சரீரம் விமல மடையாது அழுக்கு மலிந்து இருப்பதனாற்றான்—அசுத்த பௌதிகங்கள் நிறை பேதித்து இருப்பதனாற்றான்—திணை மயக்கத்தினாற்றான் நரை திரை மூப்புப் பிணிகளும் சாக்காடும் உளவாகின்றன. இவை ஒழிய வேண்டும் என மெய்யடியார் அருளியமை அன்னவர் திருவாய் மலர்ந்த வேத நூல்களில் பரக்கக் காணப்படும். அமலம் என்னும் அமிர்தத்துவம் (மரண மற்ற நிலை) பெறுதற்கே பரிபாகம் என்னும் பக்குவம் வேண்டியதாயிற்று. பரிபாகம் இன்றேல் அமலம் சித்தித்தல்—நித்தியத்துவம் பெறுதல் முயற் கொம்பே யாகும். மலம் பரிபாகம் அடையப் பெற்ற விமல தநுவுடைய மெய்யடியாரே பிணி மூப்புச் சாக்காடுகள் ஒழிந்து அமிர்தத்துவம் என்னும் நித்தியத்துவம் அடைபவராவர். மலம் விமலமாதல் எவ்வாறு? குருவருளால் இனமான முன்னிலைப் பொருள்களை நிறை கண்டு பஞ்சீகரணித்தலால் உடலுயிர்களில் உள்ள மலம் என்னும் அழுக்கு அளவோடு கழிய வேண்டும்; பழையன கழிந்து புதியன புக வேண்டும்—ஆக்கமுற வேண்டும். இதனால் விமலம் சித்திக்கும் என்க. இதுதான் காய சித்தி எனப்படுவது.

"காயமாயத்தைக்கழித்தருள்செய்யாய்"

என்றது மாணிக்கம். அண்ணல் திருமூலர் திரு மந்திரத்தில் இவ் வுண்மையைப் பரக்கக் கூறி யிருக்கின்றனர். விரிப்பின் மிகப் பெருகும். ஒரு சில காட்டுதும்:—

### திருமந்திரம்.

சுழிற்றிக் கொடுக்கவே சுத்திக் கழியும்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கு முபாய மறிவார்க்
கழற்றித் தவிர்ந்துடல் அஞ்சன மாமே.

அஞ்சனம் போன்றுடல் ஐயறு மந்தியில்
வஞ்சக வாத மறுமத் தியானத்தில்
செஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நீர்சமே.
(ஷ 3-ம் தந். சரீர சித்தி உபாயம் செ. 3,4,)

களிம்பறுத் தானெங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தானருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே.
(ஷ 1ம்-தந். உபதேசம். செ. 2)

பளிங்கில் பவளம் பதிதல் — விமல மடைந்த உடலில் உள்ள அன்பு என்னும் அப்பில் அருட் சத்தி பதிதல்— சத்தி நிபாதம். இவற்றால் அசுத்த சரீரம் என்னும் மல பௌதிக சரீரம் அவ் அசுத்தம் என்னும் அழுக்கு நீங்கி விமல மாதலே மல பரிபாகம் என்னும் நித்தியத்துவ நெறி என்பது நன்று புலப்படும். இத்தகைய மல பரிபாகம் கைவர வேண்டும் என்றே மெய்யடியார் எல்லாம் எம் பெருமானை வேண்டினர். பின் வரும் பட்டினத்தடிகள் திருவாக்கு இவ் வுண்மையை நன்று புலப்படுத்துகின்றது.

## பட்டினத்தடிகள் பாடல்.

காலையுபாதிமலஞ்சலமாமன்றிக்கட்டுச்
[சியில்
சாலவுபாதிபசிதாகமாம்மற்றைச்சஞ்சித
[மாம்
மாலையுபாதிதுயில்காமமாம்இவைமாற்றி
[விட்டே
ஆலமுகந்தருள்அம்பலவாவெனையாண்
[டருளே.

உபாதி — தடை; துன்பம். மலம் விமலம் பெறாது அழுக்கு மலிந்து இருப்பதனால் மனம் தூய்மை அடைந்து உணர்ச்சி சிறக்கமாட்டாது. தூய உணர்ச்சி ஏற்பட மாட்டாது. நிறை முறை இல்லாத உணவுகளால் — ஒழுக்கங்களால் சரீரத்துள்ள மூலாக்கினி அசுத்த மடைந்து வாயுவும் அசுத்த மடைகின்றது. இதனால் மலச்சிக்கலும் மூல நோய் முதலிய கொடிய ரோகங்களும் சாங் கோபாங்க மாக வேறு பல நோய்களும் ஆக்க முறுகின்றன. கோபம் காமம் முதலிய அசுத்த குணங்களும் நிறை முறை பிறழ்ந்து ஆக்க முற்றுக் கேடு பயக்கின்றன. இதனால் சரீரமும் மனமும் அவச் சலன மடைந்து திருவருணாட்டம் அமையப் பெறாது ஆகாமியங்கள் ஈட்டப் படுகின்றன. முன்னிலைகள் உறவு படாது பகைமை அடைகின்றன. இத்தன்மை உடையவன் செல்லாத் தீவாழ்க்கை உடையவனாய்க் கடவுள் வழிபாடு— திருவருணாட்டம்— வாய்மையான சந்தி வந்தனம் (சந்தியா வந்தனம்) என்பன அமைந்து படியேற்றம் பெற முடியாதவனாய் இடர்ப் படுகின்றான். இம்மை மறுமை இரண்டும் கேடடைதலால் இன்னான் சென்மம் அறமுதல் நாற் பொருட் பயனையும் ஒருங்கே இழந்து ஆட்டின் கழுத்திலுள்ள அதள் போலப் பயனற்ற தாகின்றது. ஆயுட் பெருக்கம் இன்றி உடலம் வம்பு பழுத்து மாண்டு போகின்றது. உடலம் வம்பு பழுத்து மாண்டு போதல் கூடாது என்று அருளியது மாணிக்கம். (திருவாசகம் குலாப்பத்து செ. 6).

மல பரிபாகம் பெற்றபோது தான் இத் துன்பங்கள் நீங்கும்—மாற்ற மடையும். மல பரிபாகம் பெற்றபோது பிணி மூப்புச் சாக்காடுகளுக்கு இடமாகிய அசுத்த காயப் பெண் விமல காயப் பெண்ணாக மாற்ற மடைவள். அப்பொழுது எவ் வகையான உபாதியும் இல்லை. மலச் சிக்கல் இல்லை. பிணி இல்லை. அழிபசி உறுபசி என்பன இல்லை. அசுத்தமான துயில் காமம் கோபம் முதலியன இல்லை. நரை இல்லை. திரை இல்லை. மூப்பில்லை. சாக்காடு இல்லை. காமம் கோபம் முதலியனவும் மாற்றமடையும். முன்னிலை யாவும் உறவு படும். முன்னிலை தன்னிலைகள் ஒன்று படுதலாகிய வாய்மையான சந்தி வந்தனம் — சிவ பூசை அமையும். இடம் பொருள் ஏவல் வேண்டிய வாறு அமையும். இது தான் அமல முதற்படி; முத்தி வாயில். மலம் பரிபாகம் அடைதலாகிய இவ் அரிய பெரிய நிலை கைவரப் பெற்ற மெய்யடியான் எவ் வகையான உபாதியும் இன்றிப் படியேற்றம் பெற்று தனது விமலமான உடலில் அருட் சத்தி என்னும் ஞான சத்தி அணு அணுவாகப் பதிதலாகிய சத்தி நிபாதம் பெற்று அவ் விமல உடலம் அமல மடைந்து ஞான சத்தி வடிவமாக (ஓ வடிவம்) மாற்ற மடைதலால் நித்தியத்துவம் பெறுவன். இது பற்றியே மல பரிபாகம் முத்தி வாயில் எனப்பட்டது. இத்தகைய இருவினை ஒப்பு மல பரிபாகம் கைவரப் பெறாதவன் படிப்பு செல்வம் அதிகாரம் என்பவற்றால்


"வித்தகம்"
சந்தா நேயர்க்கு
**விண்ணப்பம்.**

எமது இரண்டாம் வருட "வித்தகம்" சந்தா நேயர்களுக்கு அடுத்த இலக்கம் தொடக்கமாக வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். ஆதலால் வி. பி. கமிஷன் முதலிய செலவு ஏற்படாவண்ணம் ஒவ்வொருவரும் தம் தம் சந்தா பணத்தைக் கீழே காணப்படும் விலாசத்துக்கு முன்னாக பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர், அல்லது மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கும்படி வணக்கத்தோடு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு:- சிலோன் போஸ்டல் ஆர்டர் புதுவை தபாலாபீசில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

ரா. நாகரத்தினம்.
வித்தகம் ஆபீஸ்,
புதுச்சேரி.
Fr. India.

எத்துணைப் பெரிய உந்நத நிலையில் வீற்றிருப்பவனே ஆயினும், தன்னை 'வேதாந்தி" என்றோ "சித்தாந்தி" என்றோ "சமரசம் கண்டவன்" என்றோ கூறிக் கொள்பவன் ஆயினும் உபாசக நிட்டையாளனாய் எத்துணைப் பெரிய மருட் சித்துக்களை ஆடுபவனே ஆயினும் அவன் புருஷார்த்தங்களைப் பெற்று இன்ப வாழ்வடைதலும் நித்தியத்துவம் பெறுதலும் முயற் கொம்பேயாகும். ஆதலாற்றான் "இவை மாற்றி விட்டே ஆல முகந்தருள் அம்பலவா எனை ஆண்டருளே" என இரங்கினார் எமது பட்டினத்தடிகள். உடலுயிரில் உள்ள அழுக்கே—மலமே பிணி முதலியவற்றிற்குக் காரணமாய்ப் படியேற்றம் பெறுதற்குத் தடையாய் உள்ளன. உலகியலுக்கு ஏற்ற வைத்தியர்களும் மல சலங்களைப் பரீட்சித்தால் நோயை —உடல் நிலையை அறிந்து கொள்வர். பவரோக வைத்தியன் எனப்படும் எல்லாம் வல்ல சித்தனாகிய சற்குரு நாதனே பிணி முதலியவற்றிற்குக் காரணமாய் அசுத்த நிறையின் காரியமாயுள்ள பௌதிக நிறை பேதமாகிய திணை மயக்கங்களை அறிந்து இனமான —காரமுள்ள முன்னிலை அழுக்குக்களை நிறை கண்டு பஞ்சீகரணிக்கச் செய்து உடலுயிரில் உள்ள அழுக்குக்களை மாற்ற வல்லனாவன். முன்னிலை எல்லாம் நஞ்சே—ஆலமே. தன்னிலையாகிய உடலுயிரும் அன்னதன்மையவே. ஆதலால் அழுக்கை அழுக்கால் மாய்த்தல் — இனத்தை இனத்தால் காத்தல் என்னும் உபாயத்துக்கு ஒப்ப நிறை முறையான அருந்தல் பொருந்தல்களாற்றான் அழுக்காகிய மலத்தை மாற்ற வேண்டும். இஃதன்றி மனோ தர்மத்தால் வேறு தடம் புகுந்து மல பரிபாகம் பெறலாம் என்பது பித்தன் கூற்று. ஆலத்தினாற்றான் ஆலத்தை அமுதமாக மாற்ற வேண்டும். இது பற்றியே "ஆல முகந்தருள் அம்பலவா" எனக் கருத்துடை அடை கொடுத்துக் கூறப்பட்டது. ஆலம் அமுதமானால் காலனை வென்றிடலாம் என்பது வேத உண்மை. பின் வரும் பிரமாணங்களும் மலபரிபாகம் பெறாத விடத்து உளவாகும் துன்பங்களால் படியேற்றம் பெறுதல் முடியாத காரியம் என்பதனை நன்று வலியுறுத்துகின்றன.

## பட்டினத்தார் புலம்பல்.

கன்னிவனநாதா கன்னிவனநாதா

ஐந்துபுலனு மடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந் தேறேனேயென்குதே.

காமக்குரோதங் கடக்கேனேயென்குதே
நாமேயரசென்று நாடோறுமெண்ணுதே.

மாதாஉருக்கொண்டு மறலிவஞ்சமெண்ணு [தே
ஆதரவுமற்றிங் கரக்காயுருகிறண்டா.

கந்தனை யீன்றருளுங் கன்னிவனநாதா
எந்தவிதத்தினு னேறிப்படருவண்டா.

(ஷை செ. 11, 12, 19, 20.)

பவரோக வைத்தியனாகிய எம்பெருமான் அடியவர் அங்கமாகிய உடலுயிரானது (சீவன்) அமல மடைந்து மகா லிங்கமாகிய ஞானகாசத்தில் ஒடுங்குதற்கு ஏற்றவாறு அவ் அங்கத்துள்ள பிணி முதலியவற்றை மாற்றி— மலத்தை விமல மாக்கி அவரை ஆட்கொள்ளுதல் பின் வரும் பிரபல சுருதிகளால் வெள்ளிடை மலையாதல் கண்டு கொள்க.

## சுந்தரர் தேவாரம்.

"அங்கத்துறு நோய்கள் அடியார்
மேல்ஒழித்தருளி
..................................."

"ஊனத்துறு நோய்கள் அடியார்
மேல்ஒழித்தருளி
..................................."

(ஷை திருக்கேதீச்சரம். பண் நட்ட—பாடை
[செ. 5, 7.)

## அப்பர் தேவாரம்.

"மல நோய் தீர்க்கு முதல்வன்கண்டாய்"
(ஷை திருமறைக்காடு திருத்தாண்டகம்
[செ. 9)

"உடலுறு நோய்தீர்த் தென்னை ஆட்கொண்
[டாரே"
(ஷை தனித்திருத்தாண்டகம் செ. 6)

## ஞானசம்பந்தர் தேவாரம்.

"...நரை திரைகெடுதகவது அருளினன்...."
(ஷை திருவலிவலம் திருவிராகம் பண்—
[வியாழக்குறிஞ்சி செ. 6)

உடலுறு நோய் தீராத போது — மல பரிபாகம் கைகூடாத போது காமம் கோபம் முதலிய தீய குணங்கள்—பாசங்கள் பற்றுக்கள் நீங்குவதும் —படியேற்றம் பெறுதலும் வீடடைதலும் முடியாத காரியம். உடல் பிணி மூப்புக்களால் நலிந்து பிணமாகி விழுதலால் பிறவி நெறியே உளதாகும். இஃது அறிஞர் என்பவரால் மறுக்க முடியாத வேத உண்மையே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. நோய் தீர்ந்த அங்கம் அமலமாய் மகாலிங்கத்தில் ஒடுங்குதலே யன்றிப் பிணமாகி விழுதல் இயற்கை விரோதமாகும்—அசம்பாவிதமாகும். இத்தகைய மல பரிபாகப் பெற்றியை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத தற்காலச் சைவருட் பெரும்பாலார் இவ் உண்மைகளை ஒரு சிறிதும் கூறாத சில சாத்திரக் கொள்கைகளையே வாய்மையான சித்தாந்தம் என நம்பி "உடம்பு பிணி மூப்புக்களால் நலிந்தால் என்ன? உயிருக்கும் உடம்புக்கும் என்ன சம்பந்தம்? உடம்பு எவ்வாறு துன்புறினும் உயிர் துன்ப மடையாது அதனைப் பிரிந்து வேறு எங்கோ சென்று—கயிலை சென்று சிவத்தோடு அத்துவிதமாய்க் கலந்து விடும் தானே!" என முற்றும் உணர்ந்தவர் போல முழங்கி வேத உண்மைகளைப் புறக்கணித்து அவற்றிற்கு மாறுகப் போராடி "பெரு நோய்கள் மிக நலியப் பெயர்த்தும் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றார்" (அப்பர் தேவாரம்) — இறத்தலாகிய சாதலையே எதிர்பார்த்துப் பிரவிருத்தியில் கண்ணும் கருத்துமாய் நிவிர்த்தியை நாடுவதில் சோம்பேறிகளாய் வீற்றிருக்கின்றார் என்றே கூறற்

பாற்று. இருவினை ஒப்பு மல பரிபாகம் சித்திப்பது என்றால் எளிதாமோ? அரிது! அரிது! மா அரிது! அல்லவா? குரு வருளால் பெறப்படும் உரிய சாதகங்களை வழுவற அநுட்டித்தலானன்றி முனைப்பால் கண்டு பிடித்து உஞற்றும் சிலபல நடை நொடிகளால் மல பரிபாகம் சித்திக்கற்பாலது ஆமோ? மல பரிபாகமே கந்தழி எனப்படுவது. "மணங் கமழ் தெய்வத்து இள நலம்" என்னும் பண்டைச் சைவ முத்தி நெறி இதுவே என்க. விரிப்பிற் பெருகும். கந்தழி இலக்கணம் "பாசுபதம்" என்னும் கட்டுரையில் விளக்கப்பட்டது. ("வித்தகம்" தொகுதி 1 இல 37) ஆங்குக் காண்க. இருவினை ஒப்பு மல பரிபாகம் வாய்ந்த போது தான் "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய இறைவன் திருவடி கண்டு — நம் முள்ளே குரு தரிசனம் பெற்று வாய்மையான சிவ வழிபாடு புரிந்து நித்தியத்துவம் பெற முடியும். — பின்வரும் பிரமாணம் இவ் வுண்மையை நன்று வலியுறுத்துகின்றது.

## அப்பர் தேவாரம்.

தேசனைத்தேசன்றன்னைத்தேவர்கள்போற்
[றிசைப்பார்
வாசனைசெய்துநின்றுவைகலும்வணங்கு
[மின்கள்
காசினைக்கனலையென்றுங்கருத்தினில்வைத்
[தவர்க்கு
மாசினைத்தீர்ப்பர்போலுமாமறைக்காடனு
[ரே.

(ஷ திருமறைக்காடு திருநேரிசை செ. 9)

["வாசனை செய்து நின்று வைகலும் வணங்குமின்கள்" என்பது மணம் கமழ் தெய்வத்து இள நலம் என்னும் பூ மணம் போலும் சிவ மணம் கமழப் பெறுதலாகிய மல பரிபாகம் பெறுதலையே உணர்த்தி நின்றது. மல பரிபாகம் பெற்ற பின்பு தான் வாய்மையான சிவ வழிபாடு "வைகலும்" புரிய முடியும். மல பரிபாகம் பெற்ற போது தன்னிலை முன்னிலையாகிய எவ்விடத்தும் வாசனையே—சிவ மணமே கமழும்.

## பட்டினத்தார் புலம்பல்.

ஆர்ந்தவிடமத்தனையு மருளாயிருக்குதடி
சார்ந்தவிடமெல்லாம் சவ்வாதுமணக்குதடி.

என இந்நிலை கைவந்து நித்தியத்துவம் பெற்ற பட்டினத்தடிகள் கூறியதும் அறிக.

மல பரிபாகம் பெற்ற போதுதான் —தனது விமல காயப் பெண்ணாகிய விமல வல்லியைக் கண்ட போதுதான் மணிவாசகன் கோவை பாடினன் "திரு வளர் தாமரை" என்னும் முதற் செய்யுளாகிய தெய்வப் பாடல் மல பரிபாக மாண்பையே நன்று தெரிக்கின்றது. இச் செய்யுளின் மறை பொருள் அமயம் நேர்ந்துழி விளக்கமுற உரைக்கப் படும்.

### "வித்தக" நன்கொடை.

(F. M. S. Battugajah.) எவ். எம். எஸ். பத்துகாசாவில் உள்ள நீதிமன்றத்து தமிழ் முதலியாரும் சைவாபிமான சீலருமாகிய ஸ்ரீமாந் M. V. செல்லையா அவர்கள் "வித்தக" நன்கொடையாக ரூபா இரண்டு மன்முவந்து அனுப்பியுள்ளார்கள். இவர்களுக்கு எமது மனமார்ந்த வணக்கம் உரியதாகுக.

(ப-ர்)

இது காறும் கூறியவைகளால் உடலுயிரில் உள்ள அழுக்கு என்னும் மலம் குருவருளால் பெறப்படும் உரிய சாதகங்களால் விமல மாதலே மல பரிபாகம் என்பதும், இத்தகைய விமல தநுவுடைய மெய்யடியாரே சத்தி நிபாதம் பெற்று அமல வடிவாகிய ஞான சத்தி வடிவாய் நித்தியத்துவம் பெறுவார் என்பதும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்.

## புத்தக மதிப்புரை.

தமிழகம்:— இந்நூல் தமிழ் வழங்கும் நிலம், மொழி, இலக்கணம், இலக்கியம், தமிழர் பழக்க வழக்கங்கள் சமயம் அரசுமுறை முதலிய எத்தனையோ பல விஷயங்களைப் பற்றி ஆராய்ச்சி வல்லுநர் பலர் பல காலமாக ஆராய்ந்து ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய ஆராய்ச்சி நுட்ப உரைகளையெல்லாம் ஒருங்கு தொகுத்துக் கூறுவதோர் அரிய நூலாகும். இதனைச் சிறியதோர் அபிமான சிந்தாமணி (என்சைக்ளோபீடியா) எனக் கூறுவது மிகை யன்று. பழைய சங்க நூல் வரலாறுகளும் அவற்றால் அறியக்கூடிய பண்டைய வழக்க ஒழுக்கங்களும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் 243-247ம் பக்கங்களில் திருக்கோணமலை வித்துவசிரோமணி த. கனகசுந்தரம்பிள்ளை பி. ஏ. அவர்களும் பிறர் சிலரும், "திருவள்ளுவமாலை" என்பதும் பிற்காலத்தவர் சிலரால் பாடப்பட்டுத் திருக்குறளோடு சேர்க்கப்பட்டதேயன்றி, அச்செய்யுட்கள் கடைச் சங்கப் புலவரால் பாடப்பட்டன அல்ல எனத் தக்க நியாய வாயிலாக நிறுவப்பட்ட ஆராய்ச்சியுரை காணப்படுவது போற்றற்பாலதேயாகும். இன்னும் இதுபோன்ற சிறந்த ஆராய்ச்சி உரைகள் சில பல இந்நூலில் மிளிர்கின்றன. இத்தகைய ஆராய்ச்சி உரைகளையெல்லாம் இடையிடையே தமது அபிப்பிராயங்களோடு இனிது தொகுத்து "தமிழகம்" எனப் பெயர் புனைந்து இந்நூலை வெளியிட்ட யாழ்ப்பாணத்து நவாலியூர் வாசரும், தமிழ்ப்பண்டிதரும் எமது "வித்தக" சந்தா நேயருள் ஒருவருமாகிய திருவாளர் ந. சி. கந்தையப்பிள்ளை அவர்களுக்குத் தற்காலத் தமிழகம் மிக்க கடப்பாடுடையது என்றே கூறற்பாற்று. இந்நூல் கல்லூரி மாணவர்க்கும், ஆராய்ச்சியாளர்க்கும், வித்தியா விநோதர்க்கும் மிகப் பயன்படக்கூடியதே என்பது மிகையன்று. 282 பக்கங்கள் அமைந்த இந்நூலின் விலை ரூபா 2, சதம் 25. ஷ ஆசிரியரிடத்தும் சென்னை சைதாப்பேட்டை "ஒற்றுமை" ஆபீஸிலும் பெறற்பாலது. பிரதி ஒன்று எமது பார்வைக்கு அனுப்பிய ஆசிரியருக்கு எமது வந்தனம் உரியதாகுக.

(ப-ர்)

# உண்மை முத்திநிலை ஆராய்ச்சி மறுப்பு.

"வித்தக"ப் பத்திராசிரியர் எழுதியது.

(தொகுதி 2. 10-ம் வாரத் தொடர்ச்சி.)

நீரில் கழிகின்ற குமிழியைப் போல அழிகின்ற சாயா புருடனைக் காணில் என இயையும். பொழிதல் — அரு ளொளியைக் காலுதல், கரைதல் எனினும் ஆம். பரம் ஞானகாசம். இருள் மருளிலும் மருள் ஓ வடிவமாகிய தெருளிலும் (ஞான சத்தி வடிவம்) தெருள் அருளிலும் அவ் அருள் வடிவம் ஞானகாசத்திலும் ஒடுங்கிச் சத்தி வடிவாகித் திகழும் என அறிக. வேத உண்மையாகிய ஒடுக்க முறை இதுவே என அறிதற் பாற்று. ஞான காசமே சத்தி எனவும் பிரமம் எனவும் சுருதி கூறிற்று.

## கூர்மபுராணம்.

"யஸ்யஸா பரமா தேவீ
சக்திர் ஆகாச ஸம்ஜ்ஞிதா"

பரம தேவியானவர் எவருக்குச் சத்தி ஆயினரோ அவர் ஆகாசம் எனப்படுவர் என்பது இதன் பொருளாகும்.

## சாந்தோக்கிய உபநிடதம்.

"கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம" (4. 10. 5.)

ஆனந்தம் பிரமம்; ஆகாயம் பிரமம் என்பது இதன் பொருளாகும். ஆகாய மாகிய பரா சத்தி விசிட்டர் சிவ பெருமானே என்பது வேத உண்மை.

## சுத்த சாதகம்.

மண்ணினிற்றடுக்கச்சலத்தினினனைக்க
வருங்கனலிற்சுடவளியால்
நண்ணிகின்றசைக்கவெளியிடம்விடவே
நணுகிடாதென்றுநின்றிலகும்
புண்ணியசிவன்முத்தர்தம்வடிவம்
பொற்புறவ்வடிவுகண்டளவே
விண்ணின்மண்ணினிற்பாதலத்தினிலுள்ளோர்
வியப்பொடுமெழுந்திறைஞ்சிடுவார்.

(ஷெ செ. 78)

சிவன் முத்தர் வடிவம் ஊனம் அறவே ஒழிந்த அமல வடிவமாதலின் அது மண்ணால் தடுக்கப்படமுடியாது. அஃதாவது "சமாதி" என்று நிலத்துட் புதைக்கவும் — நிலத்துள்ளே "பீடத்தின் கீழ் மூடி வைத்துப் பூசிக்கவும்" முடியாதது. நீரால் நனைக்கப்படமாட்டாது. நெருப்பால் எரிக்கப்படமாட்டாது. காற்றால் அசைக்கப் படமாட்டாது. பூதாகாசத்தால் அந்தரிக்கப் படமாட்டாது. இத் தகைய அமல வடிவைக் கண்ட மூவுலகத்தோரும் வியப் போடும் எழுந்து வணங்குவார்கள் என்பது இதன் பொருளாகும். ஓ வடிவம் பெற்றுச் சிவன் முத்தராய் விளங்கிய அப்பர் பெருமான் வடிவம் நீற்றறை நெருப் பால் எரிக்கப் படாமையும் சமுத்திர நீருள் அமிழ்ந்தா மையும் இவ் உண்மைக்கு உறு சான்றாதல் கண்டு கொள்க.

"..............................................
கற்றுணைப்பூட்டியோர்கடலுட்பாய்ச்சினும்
நற்றுணையாவதுநமச்சிவாயவே."

என்பது அப்பர் தேவாரம். "நமச்சிவாய" என்பது துணையாவது எங்ஙனம்? "நமச்சிவாய" என்பதே அமல பஞ்ச கார வடிவம் — அமல பஞ்சாக்கர வடிவம் — ஓ வடிவம் என்க. இவ் ஓ வடிவம் என்னும் பிரணவ மந்திர சரீரமே கடலுள் அமிழ்ந்தாதவாறு துணையா யிற்று என்க. இந்த அமல ஐகாரத்தையே "நமச்சிவாய" "சிவாய நம" என்னும் கௌண பதங்களால் சமய குர வர் திருமூலர் முதலிய தத்துவப் பெரியார் சொல்லாமல் சொல்லி அருளினர் என்க.

## சுத்தசாதகம்.

மூன்றுநற்சுடரின்இனனொப்பவராய்
மூன்றுகாலமுமுணர்ந்தவராய்
மூன்றுலகத்துமுவமையில்லவராய்
மூன்றுலகும்மறிந்தவராய்
மூன்றுநற்காண்டமுந்தெரிந்தவராய்
மூன்றுசிற்பதமுமுற்றவராய்
மூன்றுமுன்மலமுமொருங்கறுப்பவராய்
மூன்றுதாபமுமகன்றவராய்.

(ஷெ செ. 79)

மூன்று நற்சுடர் — சோம சூரிய அக்கினி. இனன்— சூரியன். மூன்று காலம் — இறப்பு நிகழ்வு எதிர்வு. மூன்று காண்டம் — கிரியா காண்டம், உபாசனா காண் டம், சுத்த காண்டம் (சிவாத்வைத சித்தாந்த நெறி) மூன்று சிற்பதம் — சிவதுரியம், பரதுரியம், சிவதுரியம். மூன்று தாபம் — ஆன்மீக தெய்வீக பௌதீகங்கள். சூரி யன் முச்சுடருள் ஒன்று எனப்படினும் மற்றைய சுடர் கட்கும் கிரகங்களுக்கும் ஒளியைக் கொடுத்துத் தானும் அவ் ஒளியில் குன்றாது இருத்தல் போல, சிவன் முத்தர்

தம்மைச் சரணடைந்த பக்குவர்க்கு அருளொளியை ஆக்க முறச் செய்து தாமும் அவ் அருளொளியில் குன்றாது இருப்பவராதலால் "இனனை ஒப்பவராய்" என்றார்.

மேலே காட்டிய பிரமாணங்களால் சீவன் முத்தர்க்குரிய பிரணவ மந்திர சரீரமாகிய அருவுருவத் திருமேனியின் இயல்பும், அச்சீவன் முத்தர் இலக்கணமும், அவர் அருவுருவத் திருமேனியே அருளாய் அருவாய்ச் சிதாகாசப் பெருவெளியில் உலகு கண்டிட மறையும் என்பதும் யாவரும் எளிதின் உணரும்படி விளக்கமுற உரைக்கப் பட்டன. சாத்திரப் பெயர் பூண்டு வழங்கும் மற்றைய நூல்கள் இவ் உண்மைகளைச் சுத்த சாதகம் போல விளக்கமுற உரைக்கவில்லை என்பதும் அச்சாத்திர நிபுணர் பிணமாகி விழுதற்குரிய அசுத்த தநுவுடைய சீவரையே சீவன் முத்தர் எனத் துணிந்து தத்துவப் பெரியார் அநுபவத் திருவாக்குக்கள் பலவற்றை அச்சீவருக்கே உபசாரமாக வழங்கி அவரைப் போற்றிப் புகழ்ந்து விட்டனர் என்பதும் வெள்ளிடை மலையாம். திருவாசகம் திருப்படையாட்சிப் பதிகத்தைத் திருவருட் சகாயத்தால் உணர வல்லார்க்கே சீவன் முத்தர் இலக்கணம் வெட்ட வெளிச்சமாகும்.

மேலே கூறிய ஓ வடிவம் என்னும் "ஈனமில் காயம்" பெற்ற அவசரத்திற்றான் மணிவாசகப் பிரபு அச்சோப் பதிகத்தை அருளிச் செய்தனர். இவ் அரிய பெரிய சீவன் முத்தி நிலை கைகூடப் பெறுதல் எளிதாகுமா? பல கோடி சென்ம நற்றவப் பயனால் முன்னிலையில் போதரும் குருவருளால் பெறப்படும் சாதக யோகங்களால் படியேற்றமடைந்து தம் முள்ளே குரு தரிசனமாகிச் செடி சேருடலைச் செலநீக்கி அஃதாவது சாதலைத் தரும் அசுத்த நிறை நீங்கி ஈனமில் காயமாகிய ஓ வடிவம் பெற்றுத் "தான் அவன் ஆகும் சமாதி" கைகூடிச் சீவன் முத்தி நிலையை அடைதற் பொருட்டு, அச்சாதக யோகங்களை வழுவறத் தாங்கி ஒழுகுதற் கண்ணும்—தூல கற்பமுண்டு பௌதிகத் தூய்மை அடைந்து இருவினை ஒப்பு மல பரிபாகம் வாய்ந்து ஆறறிவு பூரணம் பெற்ற மானிடராதல் கைகூடித் தமது சரீரமாகிய ஆலயத்துள் ஆறு அங்கங்கள் என்னும் வரைகளைக் கடந்து சூக்கும கற்பமாகிய நாதங்களை உண்டு அஃதாவது அநாதங்களாகிய வேதங்களைக் கேட்டுப் படியேற்றம் பெறுதற்கண்ணும், அப்பால் அமலப் படியேற்றம் பெற்றுத் தூலம் பூரண அமலமடைந்து முப்பாழ் கடந்து தான் அவன் ஆகும் சமாதி கைகூடுதற்கண்ணும் மெய்யடியார் பல காலம் அடைந்த அரிய பெரிய துன்பங்கள் சீவர்கள் சிந்தனை சொற் செயல்களுக்கு அளவுபடுவன ஆகுமா? தூலத்தைச் சூக்கும மாக்குதற்கண் உள்ள அருமை இவ்வளவினது என நினைக்கவும் சொல்லவும் ஒண்ணுமா? இவ் அநுபவ உண்மைகள் எல்லாம் எம்பெருமான் தனது அருமைத் திருக்கரத்தால் எழுதி உதவி யருளிய திருவாசகத்தில் கௌணமாகக் கூறப்பட்டுள்ளன என்பர். எவர் அறிவர்? திருவாசகம் தேவாரம் என்பன வாய்ப் பறையாக இருக்கின்றனவே யன்றி அவற்றின் உண்மைப் பொருளை உணர்ந்து ஒழுகுவார் உளராயின், அந்நூல்களை அருளிய அத் தத்துவப் பெரியார் அடைந்த உண்மைச் சைவ முத்தியை அவர் அடையாமல் இருக்க முடியுமா?

## திருவாசகம்.

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து."

(ஷை சிவபுராணம்)

என்பது திருவருளாணை யன்றோ! இவ் உண்மைகளை அறியத் தவம் புரியும் சத்துவகுணப் பொலிவு அமையப் பெறாத வித்துவான்கள் சிலர் சில கொள்கைகளை மனோதர்மத்தால் சிருட்டி செய்து சாத்திரப் பெயர் புனைந்து சில நூல்களையும் உரைகளையும் உஞற்றிச் செத்துப் போவதே முத்தி என முடிபு செய்துவிட்டனர். இச் சாத்திரங்களையே வேதாகம சாரம் என நம்பினோர் பலர் இவற்றையே திறவு கோலாகக் கொண்டு, தமது வித்தியா சாமர்த்தியத்தால், தேவாரம் முதலிய தத்துவப் பெரியார் பாடல்களை அநர்த்தம் செய்து கொடிய பாவத்துக்கே ஆளாகின்றனர். இது பற்றியே வேதம் எல்லாரும் ஓதக்கூடாது என்ற விதி ஏற்பட்டது என அறிதல் வேண்டும். ஓதிப் பயனடைய முடியாது என்பதே அவ் விதியின் பொருளாகும். பூர்வ புண்ணியம் இல்லாதவர்கட்கு உண்மை நெறியில் நம்பிக்கை வருவதுமே கடினமாகும்.

உண்மை முத்தி அடைய வேண்டிய பக்குவம் உடையவன், கயிலை முதற் குரவனாகிய ஆசான் தரிசனம் பெற்று பவரோக வைத்தியனாகிய அன்னவன், சரீர பௌதிக நிறை அறிந்து அருளும் விதிப்படியே தூல கற்பம் உண்டு பௌதிகத் தூய்மை அடைய வேண்டும். பௌதிகத் தூய்மை அடைந்தவரே ஆறறிவு பூரணம் பெற்ற மானிடராவர். இவரே மக்கள் "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என்றனர் தொல்காப்பியர். கல்பம் தூலம் சூக்குமம் என இருவகைப்படும். தூல கல்பம்—அசித்துப் பொருள் — உணவு, (அன்னம் – அருந்தல் பொருந்தல் அனந்தல்) மூலிகை வர்க்கம், பாஷாண வர்க்கம் உலோக வர்க்கம் என்பன. ஆசான் அருள்வது போல் தூல கற்பத்தை அருந்தினால் அருந்தியது பொருந்தும் பொருந்தினால் அசுத்த நிறையாகிய மாயை அணு அணுவாக அனந்தலடையும். ஆன்மா அவாவடிவினது ஆதலின் தொட்டவுடன் இனிக்கும் படியான உணவுகளையே நிறையும் இனமும் அறியாது உண்டு பின் வருந்தும் இயல் புடையது.

குருநாதன் விதிக்கும் நிறையோ என்றால், தொட்டவுடன் எட்டிக் கசப்பும் பின் அழியாத பேரின்ப சுகத்தையும் தர வல்லதாகும்.

### குறள்.

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

(ஷை 95ம் அதி.—மருந்து செ. 5)

மாறு பாடு இல்லாத உண்டி — சரீர பௌதிக நிறைக்கு மாறுபடாத — பொருத்தமான உணவு. மறுத்து உண்ணல் — இச்சைப் படி உண்ணச் செல்லும் அவாவை மாற்றி—நிறையுட் புகுத்திக் குருநாதன் அருளிய முறைப் படி உண்ணுதல். இவ்வாறு உண்ணுதலால் உயிர்க்கு ஊறு பாடு இல்லை என்றார். ஊறுபாடு—உயிர் வருந்தி உடலை விட்டுப் பிரிதலாகிய சாக்காடு.

"மெய்யுறுபிணிக்குவிலக்குவதொழித்து
விதித்தனகொள்ளுவன்பிறவி
மையுறுபிணிக்குமவ்வகைகொளாமல்
வருத்துமந்நோயிடைப்படுவேன்
......................................................"

(பெருங்கழிநெடில்)

எனச் சிவப்பிரகாச சுவாமிகள் கூறியதும் அறிக. நிறை முறையோடு உணவு கொள்ளும் ஆற்றல் இல்லார் திருவருணட்டம் வகித்தற்கு அருகராகார் என்பது பின்வரும் ஞான சம்பந்தப் பெருமான் திருவாக்காலும் நன்று வலியுறுகின்றது.

### ஞானசம்பந்தர் தேவாரம்.

"பவனமாய்ச்சோடையாய்நாவெழாப்பஞ்சிதொய்சட்டவுண்டு
சிவனதாள்சிந்தியாப்பேதைமார்போலநீவெள்கினுயே
......................................................"

(ஷை திருவாரூர்—பண்—காந்தாரம் செ. 1)

மெய்யடியார் எல்லாம் நிறை முறையான அருந்தல் பொருந்தல்களால் பூதியத் தூய்மை அடைந்தே பாசங்கள் பற்றுக்கள் நீங்கியவர் ஆவர்.

### திருவாசகம்.

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை குரம்பையிற் [புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக் [கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்தெழுதருசுடர்ச்சோதி
ஆக்கி யாண்டதென் னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

(ஷை அதிசயப்பத்து செ. 8)

எனவும்,

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

(ஷை அச்சோப் பதிகம் செ. 7)

எனவும் வரூஉம் திருவாக்குக்களை நோக்குக.

நிறை முறையான அருந்தல் பொருந்தல்களால்—இல்லற ஒழுக்கத்தால் பாசங்கள் பற்றுக்கள் நீங்கியமையும் அதன்பின் மௌனோபதேசம் நிகழ்ந்தமையும் இச் செய்யுளால் கூறப்பட்டன. "துகளறுத்து எழுதரு சுடர்ச் சோதி ஆக்கி" என்பது பின் வரும் திருமந்திரச் செய்யுளின் பொருளுடையது.

### திருமந்திரம்.

பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி
அயனொடு மாலறி யாவகை நின்றிட்
டுயர்நெறி யாயொளி ஒன்றது வாமே.

(ஷை 9ம்—தந். ஆகாசப்பேறு செ. 4)

பின் வரும் திருவாக்கும் நிறை முறையான அருந்தல் பொருந்தல்களாற்றான்—இல்லற ஒழுக்கத்தாற்றான் உடலகத் துள்ள அசுத்த நிறை நீங்கி அமலம் ஆக்கமுறும்—எம் பெருமான் குடி புகுவன் என்பதை நன்று வலியுறுத்துகின்றது.

(தொடரும்.)


## "வித்தகம்"

### சந்தா விவரம்.

வருட சந்தா

உள் நாட்டிற்கு முன் பணம் ரூ. 3 0 0
வெளி நாட்டிற்கு ,, ,, ரூ, 4 0 0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.


## பிழை திருத்தம்.

வித்தகம் தொகுதி. 2. இல. 9.

| பக்கம். | பிரிவு. | வரி. | பிழை | திருத்தம். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 23 | பார்நந்தி | பராநந்தி |
| 3 | 1 | 22 | சிவாத்தவிதவன்னெறி | சிவாத்துவிதவந்நெறி, |

Imprimerie "VITTAGAM"— Pondichery. Le Gerant. R. Nagarattinam